விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 | தை 17 | ஐ. அவ் 19 | இதழ் 353
யாழ்ப்பாணம் | வியாழக்கிழமை | 30-1-1986

## மட்டுநகரில் பூரண ஹர்த்தால்

[கொழும்பு]

மட்டக்களப்பு - இருதயபுரத்தில் கடந்த 19ந் திகதி ஆயுதப்படையினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையேஇடம் பெற்ற மோதலில் பலியானோருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக நேற்று மட்டக்களப்புப் பகுதியில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு புகையிரத நிலையத்திலிருந்து அதிகாலை புறப்பட்ட 'உதயதேவி' புகை வண்டி, ரயில் நிலையத்தில் குண்டு வெடித்ததைத் தொடர்ந்து பயணத்தை ரத்துச்செய்தது. குண்டுவெடிப்பின்போது அசம்பாவிதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

ஹர்த்தாலைப் பூரணப்படுத்தும் நோக்குடன் ஆயுதபாணியாக வந்த கோஷ்டியினர் மட்டுநகர் கச்சேரி, வர்த்தகவங்கிகள், தபால் நிலையம் மற்றும் அரச அலுவலகங்களின் திறப்புக்களைத் தம்முடன் எடுத்துச் சென்று பின்னர் மாலையில் அவற்றை ஒப்படைத்தார்களாம்.

நேற்றைய ஹர்த்தால், 'ஈரோஸ்' இயக்கத்தினரின் ஆதரவில் நடைபெற்றது.

## மன்னார் மாந்தைப்பகுதியில் பலமணி நேர சமர்!

(ஏ. வி. மாணிக்கம்)

மன்னார் மாவட்டத்திலுள்ள மாந்தைப்பகுதியில் தேடுதல் வேட்டையிலீடுபட்டிருந்த ஆயுதப்படையினருக்கும் போராளிகளுக்குமிடையே நேற்று பல மணிநேரமாக நேரடி மோதல் இடம்பெற்றது.

ஆயுதப்படையினர் சிலமணி நேரத்துக்குப் பின்னர் திரும்பிச் சென்றதைத்தொடர்ந்து ஹெலிகொப்டரிலிருந்து துப்பாக்கிப்பிரயோகம் நடந்ததுடன்முகாமிலிருந்து பீரங்கிக் குண்டுகளாலும், மோட்டர் ஷெல்களாலும் தாக்குதல் நடந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொதுமக்கள்வாழும் குடிமனைப் பகுதிகளிலேயே மேற்படி தாக்குதல் இடம்பெற்றதால் அதிகமானோர் பலியாகியும், காயமடைந்துமிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

இச்சம்பவத்தின் எதிரொலியால் நேற்றுக்காலை தொடக்கம் மன்னார் பகுதியில் எந்த வித வாகனப்போக்குவரத்தும் நடைபெறவில்லை கடைகள் மூடப்பட்டிருந்தன. பொது மக்கள் நடமாட்டமுமில்லை.

மன்னார் நகரிலிருந்து சுமார் எட்டு மைல் தூரத்தில் உள்ள

[5-ம் பக்கம் பார்க்க]




# 15,000 பேர் பங்குகொண்ட வரலாறு காணாத ஊர்வலம்!

(கா. யோகநாதன்)

**இராணுவமுகாம், பாதுகாப்புவலயம் ஆகியவற்றை வாபஸ்பெறக் கோரி அரசாங்க ஊழியர், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் என்று பல்துறையையும் சேர்ந்த சுமார் 15,000 பேர் நேற்று யாழ் நகரில் பாதுகாப்புவலயத்திற்குள்ளிருந்து புறப்பட்டு யாழ். அரசாங்க செயலகம்வரை, வரலாறுகாணாத மக்கள் எழுச்சி ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடத்தினர்கள்.**

வடபிராந்திய தொழிற்சங்கக்கூட்டுக் குழுவினர், ஈழவர் முன்னணி, அன்னையர் முன்னணி ஆகியோரின் ஆதரவுடனும், யாழ் வர்த்தகசங்கம், தமிழ் மகளிர் அவை சங்கிலியன் புனர்வாழ்வுக்கழகம், வடபகுதிக் கூட்டுறவாளர், கூட்டுறவு ஊழியர், பல்கலைக் கழக மாணவர்கள், கிராமிய உழைப்பாளர்சங்கம் மற்றும் பல்வேறு பொதுமன்றங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்புடனும், தமிழ் - முஸ்லிம் மக்களின் பேராதரவுடனும் நடந்த இந்த ஊர்வலத்தில் சுமார் 3,000 பெண்கள் உட்பட சுமார் 15,000 பேர் பங்குபற்றினர்கள்

### ஊர்வலம் ஆரம்பம்

யாழ். பெருமாள் கோவிலடியிலிருந்து புறப்பட்ட இந்த ஊர்வலம் வழியிலும் தெருவிலும் வந்தடைந்த ஏனைய ஊர்வலங்களுடன் இணைந்து கச்சேரியை வந்தடைந்த போது சுமார் 15,000 பேராக அதிகரித்திருந்தது.

### அனுமதி பெறுமல் நடந்த ஊர்வலம்

ஊர்வலத்திற்கோ அல்லது ஒலிபெருக்கி பாவிப்புக்கோ எவ்வித அனுமதியும் பெறுமல் நடந்த இந்த ஊர்வலததின் முதல் எது? முடிவு எது? என்று தெரியாமல் அங்குமிங்குமாக மக்கள் சென்று கொண்டிருந்தனர்.

### ஈழவர் முன்னணி

ஈழவர் முன்னணியினர் இந்த ஊர்வலத்தில் பெருமளவில் பங்கு பற்றினர்கள், தாய்மார்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் ஆயிரக்கணக்கில் நடந்தும்.வாகனங்களிலும் ஈழவர் முன்னணியினர் தலைமையில் வந்து இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

[ம் பக்கம் பார்க்க]

## பாலம் குண்டு வைத்து தகர்ப்பு!

[சென்னை]

சென்னையிலிருந்து 25 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள ஒரு இடத்தில் பாலமொன்று குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது

நேற்று இச்சம்பவம் இடம் பெற்றது

பிரதமர் திரு ராஜீவ் காந்தி இந்துசமய சங்கீத நிகழ்ச்சியொன்றில் நாளை கலந்து கொள்ளவிருக்கின்றார். பிரதமரின் விஜயத்திற்கு எதிர்ப்புத் தெரிவிதே இக்குண்டு வைப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகக் கருதப்படுகிறது:

குறிப்பிட்டவீதி வழியாகவே பிரதமர் வருவதற்கிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்து சமயத்திற்கெதிரான கோஷங்களும். இலங்கைத் தீவிரவாதிகளுக்கும் ஆதரவான சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டுள்ளன. [ராய்ட்டர்]

தலவாக்கொல்லைச் சம்பவம்:

## ஊரடங்கு 7 மணி வரை நீடிப்பு! 24 கடைகள் தீக்கிரை!

(கொழும்பு)

நுவரெலியா மாவட்டத்தில் ஒன்பது பொலிஸ் பிரிவுகளான மஸ்கெலியா, பொகவந்தலாவ, நோர்வூட், ஹற்றன், பத்தன, தலவாக்கொல்லை, லிண்டுல, அக்கரைப்பத்தன, நுனுஓயா ஆகிய பகுதிகளில் பிறப்பிக்கப்பட்டிருந்த ஊரடங்குச்சட்டம் இன்று காலை ஏழு மணிவரை நீடிக்கப்பட்டிருந்தது

கடந்தசில தினங்களாக நடைபெற்ற தலவாக்கொல்லை கலவரங்களின்போதுஇருபத்து நான்கு கடைகள் எரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் செயலாளர் திரு. எம் எஸ். செல்லச்சாமியை 'ஈழநாடு' தொடர்புகொண்டு தலவாக்கொல்லை நிலைமை பற்றி கேட்டபோது பாதிக்கப்பட்ட தலவாக்கொல்லைப் பகுதிகளுக்கு இன்று விவசாய அபிவிருத்தி அதிகாரசபைத் தலைவர் திரு. ரஞ்சன் ஜயரத்தினவுடன் சென்று தாம்

(5ம் பக்கம் பார்க்க)

## மாணவர்களும் கைது

[வவனியா]

வவனியாவில்நேற்று சோதனை நடாத்திய இராணுவத்தினர் பாடசாலை மாணவருட்பட 200 பேரைக் கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவனியா மகாவித்தியாலயத்திலிருந்து மாணவர்கள் வெளியேறிக் கொண்டிருந்த பொழுதே கைது செய்யப்பட்டனராம். [மா]

## பாராளுமன்ற விசேட அமர்வுகள்

[கொழும்பு]

பாராளுமன்றம் இன்றும் நாளையும் விசேட அமர்வுகளை ஏற்பாடு செய்துள்ளது.

நாடற்ற பிரஜைகளின் பிரஜாவுரிமைச் சட்டத்தினைவிவாதிப்பதற்கென்றே பாராளுமன்றம் இன்று கூடுகிறது. பகல் 2மணிக்கு பாராளுமன்றம் கூடும் நாளையும் விவாதம் தொடர்ந்து நடைபெற்று மாலையில் வாக்கெடுப்பு இடம் பெறும் [இ]

# அசி விளம்பரம்

## வகுப்புகள்

National Certificate Course in English (1 year) Elementary Certificate Course in English [6 months], G C E. (O/L) English Language Course (1 year) விரைவில் ஆரம்பமாக உள்ளன. தகைமையுடைய விரிவுரையாளர்கள் வகுப்புகளை நடாத்துவர். 10-02-86க்கு முன் நேரில்வந்து தொடர்பு கொள்ளவும். அதிபர், உயர் கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (C 423)

3 வருட மருத்துவ தாதிகள் டிப்ளோமா பயிற்சி (Nurses Training Diploma) ஆங்கில மொழிமூலம் 15-02-86 ஆரம்பமாக உள்ளது. Recognised University Certificate will be issued, 10-02-86க்கு முன் நேரில் வந்து தொடர்புகொள்ளவும். அதிபர், உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (C 422)

G. S. Q (Bio) [Botany, Zoology, Chemistry] Home science Diploma [மனையியல் டிப்ளோமா] நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. G S.Q. (Maths) [Pure, Applied, Statistics, Chemistry, Physics], Montessori Diploma Teachers Training (பாலர் பயிற்சி) விரைவில் ஆரம்பமாக உள்ளது. நேரில் வந்து தொடர்பு கொள்ளவும்: அதிபர், உயர் கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். C 421)

டிப்ளோமா மனைப்பொருளியல் 12 பாடங்களை உள்ளடக்கிய பயிற்சி நெறி திருக்குடும்ப கன்னியர்மடம் யாழ்ப்பாணம் (Private section) ஸ்தாபனத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. சேரவிரும்பியோர் மாசி மாதம் 5ம் திகதிக்கு முன்னர் நேரில் தொடர்பு கொள்ளவும். (நுழைவாயில்-பிரதான வீதி, யாழ்ப்பாணம்.) (C 434)

108, Brown Road, Jaffna A/L 88 இரசாயணம் ஆசிரியர்: சத்தீஸ். ஆரம்பம்: 1-2-86 சனி 6-30 a.m. (ஞாயிறு 6-30 a. m., செவ்வாய் 4-45 p. m ) பிரிவு II ஆரம்பம்: 3-2-86 திங்கள் 5-00 p. m. (C 427)

## தேவை

உழவு யந்திரம் சகல வேலையும் தெரிந்த 50-60 வயதுள்ள சாரதி தேவை. அத்தாட்சியுடன் நேரில் வரவும். தங்க வசதி செய்துகொடுக்கப்படும். தொடர்பு வி. சோமசுந்தரம், 68, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C 411)

சாவகச்சேரியில் உள்ள பிரபல்யமான ஆலயத்திற்கு மண்டபம், மடப்பள்ளி வேலைகள் தெரிந்த உதவி பூசகர் தேவை. தொடர்பு: விளம்பர இல. C 425. C/o ஈழநாடு. யாழ்ப்பாணம். (C 425)

மிகவும் கௌரவமான குடும்பம் ஒன்றிற்கு யாழ்நகரில் நல்ல சூழலில் வீடு வாடகைக்குத் தேவை. வெளிநாடு செல்பவர்களின் வீடு சொந்த வீட்டைப்போல் மிகவும் கவனமாகவும் கௌரவமாகவும் பராமரிக்கப்படும். தொடர்பு- விளம்பர இலக்கம் 429, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (C 429)

உடுவிலில் ஒரு வீட்டினருக்கு நாள் சம்பள அடிப்படையில் தேவைப்படும் நாட்களில் அனுபவமுள்ள கார் சாரதி தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல, 438, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (C 438)

## விற்பனைக்கு

வடலியடைப்பில் வீட்டுடன் 5½ பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: ச. குணராஜா, வடலியடைப்பு, சங்கானை மேற்கு. (C 430)

10 அடி நீளமும் 8 அடி உயரமுமுடைய பாவித்த இரண்டு பெரிய கண்ணாடி அலுமாரிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: S. துரைசிங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கு, திருநெல்வேலி. (C.436)

# 88 AUG.

## A/L வகுப்புக்கள்

ஆரம்பம்: 01-02-1986

சனி காலை 11-30 மணி.

(எமது வழமையான ஆசிரியர் குழுவினுல்)

விபரங்கட்கு:

# NEW MASTER INSTITUTE

BMC LANE, JAFFNA.

(A 149)

## தவறிவிட்டது

பரமேஸ்வரன் நடராசா என்பவருடைய பாஸ்போட் புகையிரத நிலையத்தில் 28-1-86இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் செல்வி M. கந்தையா, பருளாய் ரோட், சுழிபுரம் என்னும் விலாசத்தில் ஒப்படைக்கவும்: தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C 433)

### அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

சாவகச்சேரி மகளிர் கல்லூரி லியோ கழகத்தினுல அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட இலக்கங்கள்:
(1) 1215 (2) 0526
(3) 2773

இவ் இலக்கத்தை அதாஷ்டமாகக் கொண்டோர் றசீதுகளுடன் பாடசாலை நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலம்.

தலைவர்,
சா/மகளிர் கல்லூரி
லியோ கழகம்,
(C 435)

### ஓராண்டு நினைவஞ்சலி



செல்வி
**யோகராணி சின்னக்கண்டு**

தாயின் மடியில்;
24-09-1965
தாயினுமினியோன் தாள்களில்;
30-01-1985


எங்கள் ஊன் கலந்து, உயிர் கலந்து, வான் கலந்த செல்வமே!

நீ மறைந்து ஆண்டொன்ருயிற்று. ஆயினும் கால நீரோட்டத்தினுல் உன் நினைவுகளை எம் நெஞ்சத் தினின்றும் அழித்துவிட முடியாது. இளநகை சிந்தும் உன் முகமும் இனிய மொழிகளும் எம் இதயத்தே என்றும் பசுமையாக நிலைத்திருக்கும். நீ ஏற்றி வைத்த அன்புச்சுடர் என்றும் எம் இதயத்தே ஒளிவீசி நிற்குமம்மா.

உன் ஆன்மா சாந்திபெற அஞ்சலிக்கும் அன்பு
அக்காமார்,
அத்தான்மார்,
அண்ணன்மார்,
அண்ணி, பெருமக்கள்.
2-ம் குறுக்குவீதி,
காங்கேசன்துறை.
(C 413)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

### 1-ம் வருட நினைவஞ்சலி



**இறகரி ஜெயசிங்கம் இரத்தினதுரை**

(விசேட பயிற்சிபெற்ற விஞ்ஞான ஆசிரியர்)

அன்னையின் மடியில்:
16-2-1953

ஆண்டவன் அழிப்பில்:
30-1-1985

பண்பால் வளர்ந்து அன்பால் இணைந்து அறிவால் உயர்ந்து நெஞ்சமதில் நிறைந்து நின்றும் உன் பொன் உடலைக் கூடக் காணக்கொடுத்து வைக்காத எம்மவர்க்காய் விண்ணுலகில் தெய்வமதாய் வழிகாட்டிடுவாய்.

அன்னரது ஆத்தும இளைப்பாற்றிற்காக மன்ருடும்:

மனைவி, பிள்ளைகள்,
உற்ருர், உறவினர்.
(C 375)

செல்வி
எஸ் அபிமன்னசிங்கம்
சட்டத்தரணி
உடுவில்.

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

(இல.84 அ-பிரிவுகள் 524,532)
யாழ்ப்பாண
மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற சுன்னுசம், ஊரெழு கிழக்கு வாணி இல்லத்தைச் சேர்ந்த தம்பி ஐயா பரமசிவம் என்பவரின் மரணசாதனத்தின் / மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர்
தம்பிஐயா பரமசிவம்
கைம்பெண் சங்காதேவி
'வாணி இல்லம்', ஊரெழு கிழக்கு, சுன்னுகம்.

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் } இல. 3918

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நி°வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986-ம் ஆண்டு தை மாதம் 3 ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறுபதியப்பட்டபின்னுறுதிக் கட்டளை ஏன் முற்ருனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்ருர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
க. நாகேந்திரன்
பதிவாளர்.

1986-ம் ஆண்டு தை மாதம் 28 ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.
[C 426]

### வருடாந்தப் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை கிழக்கு பாரதி கலாமன்ற சன சமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று வியாழக்கிழமை நிலையததலைவர் க. வீரவாகு தலைமையில் இருபாலை சி. சி த. க. பாடசாலையில் நடைபெறும்.

### ச. ச. நிலைய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

அரியாலை மேற்கு ஸ்ரீகலைமகள் சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு திரு. செ. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

புதிய நிர்வாகிகள் விபரம் தலைவர் திரு.சி.சிவதாசன், உப தலைவர் திரு.நா.இராமநாதன் செயலாளர் திரு.இ மதிகரன், உப செயலாளர் திரு. த. சிறி பாஸ்கரன், பொருளாளர் திரு. சி ஜெயரத்தினம், கணக்குப் பரிசோதகர் திரு. வ. கோணலிங்கம் நிலையைப் பொறுப்பாளர் செல்வி.இ. கமலினிதேவி. உறுப்பினர்கள் ஐவர் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ)

### பஸ்சேவைஇல்லை பொதுமக்கள் பாதிப்பு

[சுண்டுக்குளி]

யாழ்ப்பாணத்தில் இருந்து மணியந்தோட்டம், உதயபுரம், வசந்தபுரம் ஆகிய பகுதிகளுக்கு சேவையில் ஈடுபட்டுவந்த 790 இலக்கபஸ் கடந்த வருடம் பெப்ரவரி மாதத்தில் இருந்து நிறுத்தப்பட்டதினுல் இப்பகுதி பொது மக்களும் பாடசாலைப் பிள்ளைகள் மற்றும் அரசாங்க தனியார் துறை ஊழியர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தினமும் தமது கடமைக்குச் செல்வதற்கு ஒருமைல் தூரம் கொழும்புத் துறைக்கு நடந்து சென்றே பஸ் எடுக்க வேண்டியுள்ளது

இப்பஸ் சேவையை திரும்பவும் இப்பகுதிகளுக்கூடாக ஆரம்பிக்குமாறு இப்பகுதி மக்கள் மகஜர் மூலம் வட பிராந்திய போக்கு வரத்து சபை பொது முகாமையாளரை கேட்டுள்ளனர்.

### ஹோமியோபதி வைத்தியமுறையை ஊக்குவிக்கதிட்டம்

(யாழ்ப்பாணம்)

''ஹானிமானின் ஹோமியோபதியின் மகத்துவத்தை மக்கள் உணரச் செய்ய வேண்டும். இதற்காக மாதம் இருமுறை மக்களுக்கு இவ் வைத்திய முறையினுல் இலவச சிகிச்சைகளை மேற்கொள்ள வேண்டும்.''

இவ்வாறு அண்மையில் நடைபெற்ற பதிவு பெற்ற ஹோமியோபதி வைத்தியர்கள் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் சங்கத் தலைவர் டாக்டர் தி. பரமசிவம் கூறினுர்.

பல பதிவுபெற்ற ஹோமியோபதி வைத்தியர்கள் கலந்துகொண்ட இக் கூட்டத்தில் சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் டாக்டர் தி. பரமசிவம், கௌரவ செயலாளர் டாக். எம். வி. தில்லைசந்திரன், பொருளாளர் டாக். திருமதி என். ரட்ணேஸ்வரன்.

# ‘சலஞ்சர்’ வெடித்துச் சிதறியது!

# ஏழு விண்வெளி வீரர்களும் பலி!

(வாஷிங்டன்)

**அமெரிக்க விண்வெளிக் கலமான ‘சலஞ்சர்’ வெடித்துச் சிதறியதால் அதில் பிரயாணம்செய்த ஏழு விண்வெளி வீரர்களும் பலியானுர்கள். விண்வெளி வீரர்களில் ஒருவர் ஆசிரியை.**

**விண்வெளிச் சரித்திரத்தில் இப்படியான கோரச் சம்பவம் நிகழ்ந்தது இதுவே முதல் தடவையென்பது குறிப்பிடத்தக்கது**

நேற்று முன்தினமிரவு ‘சலஞ்சர்’ கலம் செலுத்தப்பட்டதுமே பெரியதொரு தீப்பந்தம் மேலே எழுந்ததுபோல அந்த விண்வெளிக் கலம் வெடித்துச் சிதறி அதன் துண்டுகள், செலுத்தப்பட்ட தளத்திலிருந்து 14 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள நீர்ப்பரப்பில் விழுந்தன.

இச்சம்பவம் நடந்த உடனேயே மீட்புக் கப்பல்கள் அந்த இடத்திற்கு விரைந்தன.

‘சலஞ்சர்’ கலம் சீராக இருந்ததென்றும், வெடித்ததற்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லையென்றும் விண்வெளி அதிகாரிகள் தெரிவித்தனர்.

இத்துயரச் செய்தி கேட்ட அமெரிக்க அதிபர் திரு. றெனல்ட் றீகன் அதிர்ச்சியடைந்துள்ளார்.

தமது உயர் அதிகாரிகளுடன் அவர் பகல் உணவு அருந்திக்கொண்டிருந்தபொழுது இந்தச் செய்தியை அவர் கேள்விப்பட்டதாகத் தெரியவருகிறது.

இச்சம்பவம் குறித்து இந்தியப் பிரதமர் திரு.ராஜீவ் காந்தி அமெரிக்க ஜனதிபதிக்குத் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தொலைபேசிமூலம் தெரிவித்துள்ளார். [து]

## பயங்கரவாதம் குறித்து ஐ.நா. மாநாடுகூட்டவேண்டும்

[கெய்ரோ]

எகிப்திய அதிபர் திரு முபாரக் பயங்கரவாதம் குறித்து ஐ நா. மாநாடு ஒன்று கூட்ட வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருக்கிறர்.

மேற்காசியாவுக்கான அமைதிமுயற்சியில் ஐரோப்பா பெரிதும் ஈடுபடவேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். [து]

## கட்டுரைக் கோவை

[யாழ்ப்பாணம்]

‘ஈழநாடு’வில் திரு. நா மாணிக்க இடைக்காடர் எழுதிய 25 கட்டுரைகள் ‘கட்டுரைக் கோவை’ என்ற தலைப்பில் நூலாக வெளிவருகின்றன.

வாழ்க்கையின் பல்வேறு துறைகளிலும் தாம்பெற்ற அனுபவங்களை திரு மாணிக்க இடைக்காடர் எழுத்தில் வடித்துள்ள இந்நூல் வாசகர்களுக்கு நல்விருந்தாகவும் பயனுள்ளதாகவும் அமையும் எனக்கருதப்படுகின்றது.

## இன்றைய பலன்

மாதம்- தை
திகதி- 17 (30 - 1 - 1986)
கிழமை- வியாழன்
திதி- பஞ்சமி
பின் இரவு வரை
நக்ஷத்திரம்- உத்தரம்
பிற்பகல் வரை

மேடம்: வணிகர்கள் வாழ்வில் சோதனை நிறைந்ததாக இருக்கும். சிறிய தலையிடிக்கும் இடமுண்டு. நிதானத்துடன் நடந்து கொள்ளவும்.

இடபம்: நீண்டநாள் எதிரிகள் நண்பராவார்கள். பொதுப்பணி மூலம் புகழுக்கும் இடமுண்டு. திருப்தியான தினம்.

மிதுனம்: புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும். புதிய அனுபவங்கள் கிடைக்கும். குறிக்கோளில் வெற்றியுண்டு.

கடகம்: வாழ்க்கையில் தென்றல் வீசும். கணவன் மனைவி உறவு அன்பு கொண்டதாக இருக்கும் மற்றவர்களின் கவனத்தைத் திருப்புவதில் வெற்றியடைவீர்கள்.

சிங்கம்: எதிலும் மந்தநிலை தென்படும். கடன் தொல்லை அதிகரிக்கலாம். தனிவழியில். நாட்டம் செலுத்துவீர்கள்.

கன்னி: புனைந்துரைகளால் மனது புண்படும் அதிகாரப் போதையில் தவறுகள் நடக்கும். இன்று அமைதியே நன்று.

துலாம்: ஆராய்ச்சியாளர்களுக்குப் பொன்னன தினம். அறிவுத்தாகம் மேலிடும். இனபந்துக்கள் கொண்டாட்டமும் உண்டு.

விருச்சிகம்: உண்மை இன்று ஊமையாகிவிடும். உதவி செய்யப்போய் உபத்திரப்பட நேரும். செலவிற்கும் இடமுண்டு.

தனுசு: படித்தவர்கள் மூலம் பயனடைவீர்கள். தொழில் புரியுமிடத்தில் செல்வாக்குப் பெருகும். தய்வழிச்செய்தியும் கிடைக்கும் வாகன நலனுமுண்டு.

(6-ம் பக்கம் பார்க்க)

## மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய்மேற்குகட்டுடை அரசடி விநாயகர் ஆலய புனராவர்த்தன மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் எதிர்வரும் 31 ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 42 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று 43 வது தினமாகிய வெள்ளிக்கிழமை சங்காபிஷேகமும் அதனைத் தொடர்ந்து உற்சவமும் நடைபெறும். மண்டலாபிஷேகத்தில் பங்குபற்ற விரும்புவோர் தேவஸ்தானத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ச)

## பங்களாதேஷில் நாடுதழுவிய வேலைநிறுத்தம்

டாக்கா, ஜன-29

பங்களாதேஷில் இராணுவச் சட்டத்தை நீக்க வேண்டும்; நடுநிலைப் பராமரிப்பு அரசின் கீழ் தேர்தல்களை நடத்த வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி இரண்டு முக்கிய எதிர்க்கட்சிக் கூட்டணிகள் எதிர்வரும் திங்கட்கிழமை நாடுதழுவிய வேலைநிறுத்தம் ஒன்றை நடத்த ஏற்பாடு செய்துவருகின்றன.

**உலகச் செய்திகள்**

பங்களாதேஷ் சுப்ரீம்கோட் வழக்கறிஞர் சங்கமும் இப்பொது வேலைநிறுத்தத்திற்குத் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது. [து

## ஹரிகிருஷ்ண ஹரிராமா!

[மாஸ்கோ]

“ஹரி கிருஷ்ண, ஹரி ராமா” இயக்கத்தைச் சேர்ந்த முப்பது பேர், அண்மையில் மாஸ்கோவில் கைதுசெய்யப்பட்டு மனநோய் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சோவியத் யூனியனில் மதபிரசாரத்திற்குத் தடைவிதிக்கப்பட்டிருப்பதால், இவர்களுக்கு மனநோய் இருப்பதால்தான் இப்படி நடப்பதாகக்கூறி இவர்களைப் பொலிசார் மனநோய் ஆஸ்பத்திரியில் அனுமதித்துள்ளனர். [கெ]

## பெடரல் அமைச்சரவை பதவியேற்பு

இஸ்லாமாபாத், ஜன-29

பாகிஸ்தானில் 35 உறுப்பினர் ‘பெடரல்’ மந்திரிசபை நேற்றுமுன்தினம் பதவியேற்றது.

புதிய அமைச்சர்களுக்கு ஜனதிபதி ஷியாவுல் ஹக் பதவிப்பிரமாணம் செய்துவைத்தார். [து]

## ஆயுதப்படை வீரர்கள் 400 பேர் தண்டிக்கப்பட்டனர்

(கொழும்பு)

ஒழுக்கக் கட்டுப் பாட்டை மீறிய குற்றச் சாட்டுகளுக்காக 83 ம் ஆண்டு முதல் சுமார் 400 ஆயுதப்படை வீரர்கள் தண்டிக்கப்பட்டுள்ளனர்என்று பாதுகாப்பமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஆயினும் இவ் வீரர்களுக்கு எதிராக சாட்சியமளிக்க எவரும் முன் வரவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தகவல் தருகையில்; இப்படையினரில் சிலர் இராணுவ நீதி மன்றத்தின் முன்னல் நிறுத்தப்பட்டு தண்டிக்கப் பட்டனரெனவும், ஏனையோர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறினர்.

இதனிடையே கிளிநொச்சி ரயில் நிலைத்தில் பத்து பேரைச்சுட்டுக் கொன்ற இராணுவ வீரர் மீது விசாரணைகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இக் கொலைகள் சம்பந்தமாக சாட்சியமளிக்கப் பலர் முன் வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-செ)

## செயற்கை மண்!

[மாஸ்கோ]

சோவியத் யூனியன் விஞ்ஞானிகள் செயற்கை மண்ணைத் தயாரித்து வெற்றிகண்டுள்ளார்கள்.

இரசாயனப் பொருட்களைக் கலந்து இந்த மண் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது இம்மண்ணில் எவ்வித பசளையுமின்றி நீருடன் அதிக விளைச்சலைப் பெறலாம் இந்த மண்ணைக்கொண்டு வான வெளியில் சஞ்சரிக்கும் மனிதர்கள் தமது வான வெளியில் ஊர்தியில் பயிர்செய்யமுடியும். இம் மண்ணில் 70 நாள் பயிரை 21 நாளில் பயிர் செய்யலாம். [கெ]

## அமைதி ஏற்படுத்த நடவடிக்கை

[கொழும்பு]

தலவாக்கெல்லையில் அமைதி நிலைநாட்ட உதவுவதற்காக கண்டியிலிருந்து விசேட பொலிஸ் படையொன்று அனுப்பப்பட்டுள்ளது.

ஜனதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவின் உத்தரவின் பேரிலேயே இவ் விசேஷபடை தலவாக்கெல்லை சென்றுள்ளது. (ய-செ)

## பாரதி சன சமூக நிலையம்

[சுண்டுக்குளி]

மணியம் கோட்டம் பாரதி சன சமூக நிலைய முன்னேற்றச் சங்கத்தினரின் பொதுக் கூட்டம் எதிர் வரும் 2ம் திகதி நிலைய மண்டபத்தில் நடைபெற உள்ளது.

## உற்பத்தியாளர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்கும் முகமாக எதிர் வரும் சித்திரை வருடப்பிறப்பினையொட்டி “உள்ளூர் உற்பத்தி ஊக்குவிப்புக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்” நடாத்துவதற்கு வடமாராட்சி கால்நடை வளர்ப்போர் சங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக உற்பத்தியாளர்களை உடனடியாக வடமராட்சி கால்நடை வளர்ப்போர் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு சங்கத் தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் கேட்டுள்ளார் (ச)

## மணிவாக்கு

இதயம் மட்டும் தூயதாயிருந்தால் விபத்து நேரும்போது அதனுடன் போராட ஆயுதங்களும் மனிதர்களும் தாமேவந்து சேர்வார்கள். இது என் அனுபவத்தில் அறிந்ததாகும்.

— மகாத்மாகாந்தி

## நமதுநோக்கு

# காந்தியம் என்றால் என்ன?

இன்றைய இளஞ்சந்ததியினர் பெரும்பான்மையர் இந்திய சுதந்திரத்துக்குப் பின் பிறந்தவரே.

பாரதத்தில் மட்டுமல்ல, ஈழத்திலும் மகாத்மா காந்தியைப் பற்றிச் சரியாகப் புரியாத மக்கள், அவருடைய நினைவு தினத்தை அநுட்டிப்பது வெறும் சம்பிரதாயமாகும்.

தேசபிதா என்று இந்தியாவில் நினைவு கூரப்படும் போதெல்லாம், அவரை மானிட தெய்வமென்று போற்றப்படும் போதெல்லாம் அவருடைய போதனைகளை, அவருடைய சாதனைகளை அறிந்து உணர்ந்தவர் எத்தனைபேர்?

அவர் பேணிவளர்த்த ஸ்தாபனமான இந்திய தேசிய காங்கிரஸ் தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியபோது அதன் பெயர் காங்கிரஸ் ஐ [இந்திரா] என்று மாறி விட்டது.

இன்றைய ஆளுங்கட்சி இதுவாயிருந்தாலும் பரந்த பெரிய இந்தியாவின் பொது மக்களையோ சுதந்திர போராட்டத்தின் தலைவர்கள் அனைவரையுமோ உள்ளடக்கிய ஸ்தாபனமாக வில்லையென்பது தெளிவு.

ஆட்சிபுரியும் காங்கிரஸ் [ஐ] தானும், பலமாநிலங்களில் செல்வாக்கிழந்திருப்பதையும், நாடளாவிய நிலையில் தென்படும் வன்செயல்களின் தாக்கமும், காந்தியத்தின் பெருமைக்கு இழுக்குத்தேடிய தென்றே கொள்ளவேண்டும்.

தென் ஆபிரிக்காவில் இருந்த காந்தியின் பரிசோதனை நிலைய ஆச்சிரமம் இன்றைய இன ஒதுக்கல் போரில் எரிந்து சாம்பராயிற்று.

இலங்கை உட்பட உலகெங்கும் ஆயுதப்போராட்டம், கெரில்லா எதிர்ப்பியக்கம், பயங்கரவாத செயல்கள் தினசரி மலிந்துவருகின்றன; இவையாவுக்கும் மேலாக உலகின் வல்லரசுகள் -அமெரிக்காவும் சோவியத் ரஷ்யாவும், அணுஆயுதப் போட்டியில் ஈடுபட்டிருப்பதே காந்தியம் என்றொரு இலட்சியம் உண்டா என்ற கேள்விக்குக் காரணமாகிறது.

• உண்மையில் காந்தியம் என்றொரு தனித்தத்துவம் இல்லை என்பதை காந்தியே உலகுக்கு விளக்கிவந்தார்.

நாடு சுதந்திரமடைந்த பின்னர் தான் ஒரு செல்லாக் காசு போலிருப்பதை உணர்ந்த பின்னும், அவர் காந்தியம் என்றொரு வாழ்க்கைமுறையோ, அரசியல் கோட்பாடோ, அல்லது ஒரு புதிய மதமோ இருக்கவில்லையென்று வாதாடினார்.

மேனாட்டுப் புலவர்கள் றஸ்கினும், டால்ஸ்டாயும்-பகவத்கீதையுமே தம்முடைய சுதந்திரப் போராட்டத்தைப் பரிசோதனை செய்வதற்குத் துணை நின்றன என்று பணிவுடன் விளக்கி வந்தார்.

எனவே காந்தியம் என்று நாம் சொல்லும்போது செயல்வீரன் காந்தியை நினைவில்கொண்டு, அவருடைய சாதனைகள் மூலம் 'காந்தியம்' என்ற தத்துவத்தைக் கட்டி எழுப்புவதில் தவறில்லை.

இன்றைய உலகுக்கு அது எவ்வாறு பொருந்தும்?

'இன்னாசெய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்' என்பது நாம் குறிப்பிடும் காந்தியத்தின் மூலைக்கல் எனலாம்.

தூக்கிலிடப்பட்ட பத்திரிகை ஆசிரியர் நதுரம் கோட்சேயைக் கேட்டால் அவர் அது பயனற்ற 'வெறும் வேதாந்தம்' என்பார்.

காந்தியைக் கொன்ற கோட்சே தாம் செய்ததுசரியென்று எண்ணிக்கொண்டு தூக்குமரத்தில் கழுத்தைக் கொடுத்தபோதும், தேசத்துக்குச் சுதந்திரம் தேடித் தந்த தந்தைக்கு 'வீடுபேறு' அளித்தபோதும் நாம் குறிப்பிட்ட குறள் பொய்த்துப் போகவில்லை; 'காந்தியம்' மடிந்துவிடவில்லை.

தென் ஆபிரிக்காவில், தென் அமெரிக்காவில், ஐக்கியஅமெரிக்காவில், ஐரோப்பாவில், ஆசியாவில், ரஷ்யாவில், உலகெங்கிலும் அணு ஆயுதப் போரின் பயமும், அதனைத் தடுக்கவேண்டும் என்ற மக்கள் போராட்டமும் அதிகரித்துவருகின்றன.


இந்தியப் பிரதமர் இந்திராவைக் கொலைசெய்த இந்தியாவில் மட்டுமல்ல; உலகெங்கிலுமே இந்தக் கோழைத்தனமான செயல் வரலாற்றை மாற்றி அமைக்கவல்லதல்ல என்று கொள்ளப்படுகிறது.

வறுமையில் உழல்பவர் ஒருபுறம், செல்வத்தில் திளைப்பவர் ஒருபுறம்; இந்த அநீதியே உலகில் போருக்கும் பூசலுக்கும் மூலகாரணம். இதனைக் கட்டுப்படுத்த எழுந்த இயக்கமே சர்வோதயம். அன்பில் பிறந்ததே அந்தத் தத்துவம்.

இலங்கையின் இனப் பிரச்னை என்றாலென்ன; 'பயங்கரவாதம்' என்றாலென்ன; இந்திய வம்சாவளியினர் உரிமைப்போர் என்றாலென்ன இவ்வித அநீதியில் அதனை வளர்த்து வரும் ஆட்சிமுறை ஜனநாயகமாகாதென்பது காந்தியம்.

சத்தியசோதனை மீளாய்வுக்குரியதென்ற கருத்து கிழக்கில் மட்டுமல்ல மேற்கில் வலிமை பெறுகிறது.

'வாய்மை எனப்படுவது யாதெனில் யாதொன்றும் தீமை இலாத சொலல்' என்ற இரு வரிகளுமே காந்தியத்தின் உள்ளுடன் எனலாம்.



# இன்றுகாந்தி நினைவுதினம் சர்வோதய தோற்றம்

உலகிற்கு உள்ளத்தின் தன்மையை ஒட்டிய அறிவியற் சிந்தனைகளைக் கிளர்ந்து ஒளிரச் செய்த பலபெரியோர்களில் கார்ல் மார்க்ஸ் ஒருவராவர். அவர் மாந்தர்க்கு உலகஇயற்கையில் விளக்கமற்றுப் புலப்பட்ட அவ் இயற்கையைத் தெளிவுபடுத்தி விளக்கியதே அவரின் அறிவுடமையாகும். உலகில் உள்ள செல்வம் செல்வாக்கில் செழிக்காத ஏழையர்கள் எல்லோரும் ஒரு கூட்டமாகும். அக் கூட்டத்தார் உலக செல்வத்தையும் செல்வாக்கையும் பெற்று வல்லமக்களாக எழுகை உறுவார்கள் என்பதே அத்தெளிவிளக்கமாம். அவ்விளக்கமான எழுத்தை உள்ளுணர்வோடு படித்தவர்கள் சிந்தித்துசெயற்படத் தொடங்கவே அச்செயற்பாட்டுக்கு நல்லவிளைவு ஏற்பட்டது.

இதனோடு காலம், நிலம் அறிந்து அதனோடு ஒட்டிவாழ்ந்த நிலமக்களிலும் பார்க்க அதனோடு ஒட்டாது எதிர் முனைப்பாக வாழ்ந்த தலைமக்களில் பல்லோர் முதற்பொருளுடையவர்களாய் அதனை மேலும் மேலும் வளர்ப்பதில் கண்ணாகி வளம்பட்டு முதலாளியாகி விட்டார்கள். இவர்கள் காலம் நிலம் என்ற முதற்பொருள்கொண்டுகருவாகிப் கருப்பொருள்களை ஆட்சி செய்யும் அவாவினால் அவ்வாறு முனையும் மக்கள் கூட்டத்தை மடக்கி மடமையும் மடிமையும் உடையவராக உளப்படுத்தும் முறைநிலையாலும் பிறிதொரு மக்கள் கூட்டமாகவும் அஃது அவருடை தெளிவில் தென்பட்டது. இவ்வாறு முதல் கரு என்ற வகைப் பொருள்கள் மூலம் உள்ளவன் இல்லாதவன் என்ற இருவேறு இயற்கையை ஒருவேறில்லா இயற்கையில் தெளிந்து கொண்ட பெருமையே அவர் பெருமையாம். வல்லோன் மெல்லோன் என்ற சீவ உண்மையை உணரத்தவறி, வல்லோன் மெல்லோனின் வளர்வில் மேவும் வன்மைத்தனமாம் செயற்கையை இயற்கையாக கார்ல் மார்க்ஸ கண்டு கொண்டதைக் கற்றோர் அவர்கல்வியில் அறியத் தவறி அவரின் கருத்துக்கு நல்ல விளைவுகொள்ளக் கால் கோள் செய்தனர். அக் கால் கோள் கண்ணியமான விளைவை அளிக்கையில் வல்லோர் (முதலாளி) மெல்லோர் (தொழிலாளி) கூட்டமும் புரியும் செயற்பாட்டில் பெரிதும் வேற்றுமை பிறவாததால் நடுநிலைச் சிந்தனையாளர் மார்க்ஸ்சின் சிந்தனையில்மீளாய்வு செய்தனர். அவ்ஆய்வின் ஆக்கமே சர்வோதயம் என்பது.

சிந்தனையாளர் சிந்தனைச் செயலாளர் கருப் பொருள் ஆட்சியில் முயலுகையில் முதலற்ற முதலாளிகள் முதலற்ற தொழிலாளிகள் என்று வகுப்பு நிலை முறைகொள்ளத் தொடங்கியது. துவங்கவே அதற்குரிய கருத்துக்களும் தத்துவங்களும் உடன்பாடாயும் எதிர் மறையாயும் மக்கள மத்தியில் மலர்ந்து வடிவமுற்றது. இவ் வடிவம் முதலாளி உலகம் தொழிலாளி உலகம் என்று ஓருலகத்தை இருவேறு உலகமாக இருத்தலாக்கியது. இந்த இருப்பு உலகம் மக்களால் உருவமாக்கியபடியால் ஏதோ ஒருகாலத்தில் மக்களாலே மறைக்கப்படும். இந்தச்செயற்கையான வாழ்வியல் இயக்கத்திற்காக இயற்கையான வாழ்வியல் இயக்கம் இனிதுறுது ஊனமுறவிடுவது மக்களறத்திற்கு ஒவ்வாத காரியமாகும். இந்த ஒவ்வாத காரியத்தை ஒவ்வும் காரியமாக மக்களிடத்தில் மலரவைத்தால் ஒருலகம் மீண்டும் வடிவுறலாம் என்பதில் நம்பிக்கை வைத்து முனைந்தவர்களில் 'மகாத்மா' காந்தி அடிகள் தலையனவர் இவர் முதலாளி தொழிலாளி என்ற வகுப்பு கோட்பாட்டை அழித்து இரு வகுப்பாரும் மாந்தர்தன் கொண்டது எல்லோரும் உழைத்தல்வேண்டும். இங்கு உழைப்பு என்றது உடல் உழைப்பையே சிறந்து குறித்ததாகும். முதல் உள்ள ஒருவனும் முதல் அற்ற ஒருவனும் தன் உணவு-உடை-உறையுள் என்பற்றின்வளர்ப்பத்திற்காக நாளும் அன்றைய அளவுக்கு மட்டும் உழைத்தேயா வேண்டும் முதல் என்ற பொருள் குறித்து உழையாதிருத்தல் ஊனவாழ்வு. அறிவாளியானாலும் தன் தேவைக்குச் சிறிது உடலுழைப்பு உழைப்போரிடம் இணங்கி உழைப்பைப் புரிதல் வேண்டுமென்பது அவரின்

புலவர் நா. சிவபாதசுந்தரனார்

எனவே மாந்தராம் ''அனைவரதும் மேம்பாடு'' என்ற கருத்துலகைக் காட்சிகொண்டார். இதன் பெயரே ''சர்வோதயம்'' என்பது.

சர்வோதயத்தைக் காட்சி கொண்ட மகாத்மா காந்தி அடிகள் முதலாளி - தொழிலாளி என்று இரு வேறு இயலில் இயைந்த உலகை ஒரு வேறு இயலில் இயைந்து இருத்தல் வேண்டும் என்டதில் முனைந்தபோது அவர்தெளிந்து குறிக்கோள். இதனால் அவர் நூல்நூற்றல் புரியாது நித்திரைக்குப் போவதில்லை. அந்த நூற்பிலே கடவுள் தியானமும் மேற்கொண்டும் விடுவார். பகவத்கீதை தந்தருளிய மாயாரதப் போர் நடத்திய கண்ணபிரானே பசுமேய்த்தல் தொழிலைப் புரிந்தார். அந்த நேரத்தில் புல்லாங்குழல் இசைத்து நாதாந்தப் பொருளாம் நாதன் தாள் நாடு

(6-ம் பக்கம் பார்க்க)

# ''ஜனநாயகம் சீர்குலைந்து கலகக்கும்பல் நாயகமாக மாறுதல்கூடாது'' என்பது காந்தியம்

காந்தியடிகள் கயவனின் துப்பாக்கிக் குண்டுக்குப் பலியாகி நாற்பது வருடங்களாகின்றன. இன்று 30 - 1 - 86 அவருடைய நினைவு தினமாகும். கொலைகாரனால் அவரின் உடலை அழிக்க முடிந்ததேயன்றி, ஆன்மீக சக்தியை உலகினின்றும் பிரிக்க இயலவில்லை. எனவே அவன் கண்டது பெரும் தோல்வியாகும். காந்தீயம் இன்று உலகெங்கும் பயன் தரும் கனி விருட்சமாக கிளைவிட்டு வளர்கிறது. அவருடைய நினைவு தினத்தில் அவர் நமக்கு வழிகாட்டிச் சென்ற விசேடமான இலட்சியங்களை ஞாபகப்படுத்திச்சரிவரச்செயற்பட முயற்சித்தல் பொருத்தமுடையதாகும். அவருடைய உத்தம லட்சியங்கள், சத்தியம், அஹிம்சை, தியாகம், சத்தியாக்கிரகம் முதலியனவாகும். இவற்றை இடைவிடாது கடைப்பிடித்து வாழ்க்கையிலும், அரசியலிலும், வெற்றிகண்ட கர்மவீரர் காந்தியடிகளாவர்.

சத்தியாக்கிரகம் என்னும் ஒத்துழையாமை இயக்கத்தை முதன் முதலாக அரசியல் துறையில் புகுத்தி பிரித்தானிய ஏகாபத்தியத்தையே தலை குனியச்செய்த பெருமை காந்தி அடிகளுக்குண்டு அவருடைய வாழ்க்கையே ஒரு சத்திய சோதனையாக அமைந்தது. சத்திய சோதனை ஆரம்பமாகிய இடம் தென்னாபிரிக்காவாகும். அதற்குப் பக்க பலமாக இருந்த மக்கள் பெரும்பாலும் தமிழரேயாவர் அங்கு அவர் ஆரம்பித்த சத்தியாக்கிரக இயக்கத்தில் முழுமூச்சாக நின்று உண்ணாவிரதமிருந்து சிறை சென்று மெலிந்து மெலிந்து எலும்பும் தோலுமாக வற்றி நாவெழா நிலையிலும் ஆன்மஉறுதி குறையாது உயிர் துறந்த தியாகிகள் நாகப்பனும் வள்ளியம்மையும் தமிழரேயாவர்.

தென்னாபிரிக்காச் சிறை அனுபவத்தில் காந்தியடிகள் பொறித்த பொன் மொழிகளை இங்கு நினைவு கூருதல் தகுதியாகும். ''இச் சத்தியாக்கிரகப் போரில் தமிழ் மக்கள் புரிந்த துணைபோல வேறெவ்விந்தியரும் புரியவில்லை. அவர்கட்கு நன்றியறிதல் காட்ட அவர்கள் நூல்களை - விசேடமாகத் திருக்குறளைப்பயில வேண்டுமென முயற்சித்தேன்...... தமிழ் ஒரு மனங்கவரும் இனிய மொழி'' என அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் மனந்திறந்து ''தமிழ் மக்கள் எனது இரத்தக்கலப்புற்ற உடன் பிறந்தவர் போல் தோன்றுகிறார்கள்; எனப் பாராட்டியுள்ளார்கள்.

(நா. செல்லப்பா)

இலங்கை அரசாங்கம் தம்மை ஒரு சிறந்த ஜனநாயகக் கோட்பாடுள்ளதாகப் பிரசாரஞ்செய்து பெருமைப்படுகிறது. ஆனால் இங்குள்ள இரண்டாவது ஜனத்தொகை மிக்கவராகிய தமிழ்மக்கள் மனிதஉரிமைகளும்சுயநிர்ணய வாய்ப்பும் மறுக்கப்பட்டுக் கொடுமைப்படுத்தப்படும் போது ஜனநாயக ஆட்சியாளர் காந்தியடிகள் ஜனநாயகத்தைப் பற்றிக்கூறிய விளக்கத்தை வழுவற உணர்தல் உபயோகமுள்ளதாகும்.

ஜனநாயக ஆட்சியில் எந்த ஒரு பெரும்பான்மையினரும் பிரத்தியேக சலாக்கியங்களையும், தனிஅதிகாரத்தையும் பெறுவதைக் காந்தியடிகள் வெறுத்தார். I hate sueh privileges and monopoly எனக் கூறினார். சிறுபான்மையினருக்கும் முன்னேறுவதற்கு வேண்டிய சமசந்தர்ப்பம் அளிக்கப்படுதல்வேண்டும். சமசந்தர்ப்பத்தை மறுத்தல் ஜனநாயக ஆட்சிக்கு உகந்ததல்ல. சிறு

[5-ம் பக்கம் பார்க்க]

## கடைசிநேர வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

நடராசா பரந்தாமன் என்பவருடைய 600190784V இலக்கமுடைய அடையாள அட்டை யாழ். நகர் எல்லைக்குள் 24-1-86 இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யூனிவேசல் ரெலக்ஸ் (Universal Telex) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C 446)

### தேவை

சமையல் உதவியாளர் தேவை. காலை 9 மணிக்கும் 10 மணிக்கும் இடையில் நேர்முகப் பரீட்சைக்கு வரவும். தொடர்பு:- யாழ். சைனீஸ் ரெஸ்ற்றோறன்ற் [Yarl Chinese Restaurant), No 124, R. R. நல்லையா வீதி, யாழ்ப்பாணம். [C 441]

### விற்பனைக்கு

கொழும்புத்துறை ஆனந்தன் வடலி மூன்ரும் ஒழுங்கையில் இரண்டு பரப்புக் காணி [வீதிக்கருகாமையில்] சோனி 2032 Mark 2 புதிய T. V. விற்பனைக்குண்டு. தொடர்பு:- காலை 10-12 மணிக்கு 32/2, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். [C 439]

எம். ஜி. இராமச்சந்திரனின் 69-வது
**பிறந்த நாள் வாழ்த்து**

தமிழ்நாட்டு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களைவட்டுக்கோட்டை கனவத்தையைச்சேர்ந்தவர்களான து. நாகராசா, மா. கணேஸ், க. மூர்த்தி, மு. சிவா, மா. த. கோபால், இ. இராஜன், கா, தவராசா, செ. பாஸ்கரன் ஆகிய ரசிகப்பெருமக்கள் இன்றுபோல என்றும் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிருர்கள். (C 445)

**எம்பயர் திரையில்**
10-30, 2-30, 6-30,
விஜயகாந்—விஜி
**மாமன் மச்சான்**

**லிடோ சினிமா**
10-30, 2-30, 6-30
சுதாகர் - ராதிகா நடித்த
**ஆயிரம் வாசல் இதயம்**
(புதிய பிரதி கலர்)

**வெலிங்டன்**
10-30, 2-30, 6-30
கமலகாசன்—சுஜாதா நடித்த
**உயர்ந்தவர்கள்**


# 15,000 பேர் பங்குகொண்ட...

(1-ம் பக்கத்தொடர்ச்சி

சாவகச்சேரி, கொடிகாமம், பருத்தித்துறை, அச்சுவேலி, நீர்வேலி, மல்லாகம், தெல்லிப்பளை, மாவிட்டபுரம், காங்கேசன்துறை, வட்டுக்கோட்டை மற்றும் நல்லூர், யாழ்நகர் ஈழவர்முன்னணி கிளையில் சுமார் 50 வாகனங்களில் நேற்றுக்காலை பெருமாள் கோவிலடிக்கு வந்து சேர்ந்தனர். ஊர்வலம் ஆரம்பித்த பின்னரும் சில ஈழவர் முன்னணி கிளையினர் வழியில் வந்து சேர்ந்து கொண்டனர். ஊர்வலத்தில் சுலோக அட்டைகளுடன் கலப்பை அடையாளம் கொண்ட செங்கொடிகளை தாங்கிச் சென்றனர்.

காலை 9-30 மணிக்குப் புறப்பட்ட இந்த ஊர்வலம் நண்பகல் 12 மணிக்குக் கச்சேரியை வந்தடைந்தபோது, அந்த ஊர்வலத்தின் இறுதிப்பகுதி ஆரியகுளச் சந்தியால் சென்று கொண்டிருந்தது. ஊர்வலம் ஒரு இடத்தைக் கடந்து செல்லச் சுமார் நாற்பது நிமிடங்கள் எடுத்தது.

## செங்கொடிகள் சுலோக அட்டைகள்

வடபிரதேச தொழிற் சங்கக் கூட்டுக்குழுத் தலைவர்கள் நூற்றுக்கணக்கான செங்கொடிகளும், ஆயிரக்கணக்கான சுலோக அட்டைகளும் தொடர்ந்துவர முன்வரிசையில் சென்று கொண்டிருந்தனர். கூட்டுக்குழுவைச்சேர்ந்த 13 தொழிற்சங்க உறுப்பினர்களும் கோஷங்கங்களை எழுப்பியபடி சென்று கொண்டிருந்தனர். இந்த ஊர்வலத்துடன் நாவலர்வீதி, கஸ்தூரியார்வீதி சந்தியில் வந்து சேர்ந்த கூட்டுறவாளர்களின் ஊர்வலமும் சேர்ந்து கொண்டது. இதனைத் தொடர்ந்து சமூக அபிவிருத்தி முன்னணி, அதன் பின் ஈழவர் முன்னணி, பல்கலைக் கழக மாணவர், மற்றும் பல பொது அமைப்புகள் கலந்து கொண்டன.

காங்கேசன்துறை வீதியால் சென்று, சிவன்கோவிலின் முன் திசை திரும்பி கஸ்தூரியார் வீதி வழியாக யாழ். நவீன சந்தைச் சந்தியையடைந்து, ஆஸ்பத்திரி பின் வீதியால் சென்று, ஸ்ரான்லி வீதி, பருத்தித்துறை வீதி ஆஸ்பத்திரி வீதி வழியாகச் கச்சேரியைச் சென்றடைந்தது.

யாழ். நகரில் வர்த்தக நிலையங்கள் ஆதரவு தெரிவித்து கடையடைப்புச் செய்திருந்தன. நகரில், பாடசாலை பகிஷ்கரிப்பு இடம்பெற்றது.

யாழ். மாநகரசபை, கல்லூரிகள், மற்றும் அரசாங்க செயலகங்கள் யாவும் நேற்று செயல்படவில்லை.

'இராணுவ முகாமை அகற்று' 'பாதுகாப்பு வலயத்தை வாபஸ் பெறு' 'மலையகமக்களை அழிக்காதே' 'ஆயுதப் படைக்கு நஷ்டஈடு, அப்பாவி மக்களுக்கு துவக்குசூடு' 'யுத்தங்கள் தோன்றட்டும் ரத்தங்கள் சிந்தட்டும்' போன்ற ஆயிரக் கணக்கான சுலோக அட்டைகள் எடுத்துச் செலலப்பட்டன.

ஒன்றன் பின் ஒன்ருக, ஒலிபெருக்கி வாகனங்கள் ஓயாமல் சுலோகங்களை எழுப்பிச் செல்ல, ஊர்வலத்தில் சென்றவர்களும், 'இராணுவமே வெளியேறு' என்றுகோஷித்தபடி சென்று கொண்டிருந்தனர்,

கச்சேரியை வந்தடைந்த ஊர்வலம், அங்கு அன்னையர் முன்னணியினர், மறியல் செய்த பகுதிக்கூடாகச் சென்று கச்சேரி முன்வீதி எங்கும் ஒரே மக்கள் சமுத்திரமாக காட்சியளித்தது. பழைய கச்சேரி முன்வாசல் கதவினூடாக உள்ளே சென்ற மக்கள் கூட்டம், உள்கதவின் ஊடாக பழைய பூங்காவை வந்தடைந்தது, அங்கு முற்போக்கு கலா மன்றத்தினரின் 'நிறம் மாறும் மனிதர்கள்' என்ற வீதி நாடகம் நடாத்தப்பட்டது.

யாழ். செயலக முன்வாசல் உட்பக்கம் மூடப்பட்டிருந்ததினுல் மக்கள் மதிலால் ஏறிக் குதித்து கச்சேரி வளவிற்குள் சென்று மூச்சுவிட்டனர். பழைய கச்சேரி கூரையிலும், அடர்ந்து வளர்ந்து நின்ற மரங்களிலும், மேல்மாடிகளிலும், நின்று முன்வீதியில் நடந்த தொழிற்சங்க கூட்டுக்குழுவினரின் உரைகளைக் கேட்டுக் கொண்டிருந்தனர்,

யாழ் நகரின் வரலாற்றிலே இப்படியான ஒரு மாபெரும் எழுச்சி மிக்க மக்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடந்தது இதுவே முதல் தடவையாகும்.


## கூட்டுறவாளர், பணிப்பாளர்

யாழ். மாவட்ட கூட்டுறவாளர்களும், பணிப்பாளர்களும் இணைந்து பாதுகாப்பு வலயத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் கோட்டை இராணுவ முகாமை வாபஸ் பெறக்கோரியும் கண்டன ஊர்வலம் ஒன்றை நடாத்தினர்.

யாழ். இந்துக்கல்லூரி முன்பாக ஆரம்பித்த இந்த ஊர்வலத்தில் யாழ். மாவட்டத் சகல கூட்டுறவுச் சங்கங்களும் பங்குபற்றின. ஆண்கள், பெண்கள் உட்பட ஆயிரக் கணக்கானேர் சுலோக அட்டைகள் சகிதம் கோஷங்களை எழுப்பிய வண்ணம் ஆர்ப்பாட்டம் செய்தனர். (க)


**BECON**
(ஸ்ரீதர் சினிமா முன்பாக யாழ்.)
88 A/L
**MATHS — திரு. நல்லையா**
**ஆரம்பம் 01-02-86**
**சனி – 7 மணி** A 161

**இன்று**
**மகாத்மா காந்தியின் நினைவு தினம்**



நம்முடைய ஆசைகளைக் குறைத்துக் கொண்டு ஏழைகளுக்கு ஓரளவு மிஞ்சும்படி செய்வது நமது கடமை. —மகாத்மா காந்தி.

நுரைவளம் மிகுந்த, கூடிய எடையுடன் புதிய மெருகுடன் மில்க்வைற் நீலசோப் எங்கும் விற்பனையாகின்றது,

20 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி மகாத்மா காந்தியின் அழகிய ஸ்ரிக்கர் அல்லது படிப்பினை நூல்/ 1000 மில்க்வைற் நீல சோப் மேலுறைகளை கொடுத்து காந்தி சிலையைப் பெற்றுக் கொள்ளலாம்.

**மில்க்வைற் - யாழ்ப்பாணம்.**
(A 163)


## ஜனநாயகம்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பான்மையினரின் பிரச்னைகளையும், உரிமைகளையும் உதாசீனம் செய்யும் ஆட்சியில் ஜனநாயகம் வளர்ச்சியடைதல் சாத்தியமாகாதென்பது காந்தியடிகளின் அறிவுரையாகும். காந்தீயக்கொள்கைகளுக்குமேடைப்பேச்சில் மதிப்புக்கொடுக்கும் மாண்புமிக்க இலங்கை ஜனுதிபதி அவர்கள் காந்தியடிகள் ஜனநாயகத்தைபற்றிக் கூறிய இக் கருத்துக்களுக்குச் செவிசாய்ப்பாரா'

சமயத்துறையில் செய்ய வேண்டிய யாகத்துக்கு அவர் கொடுத்த விளக்கம் புரட்சிகரமானது. யாகம் அல்லது யக்ஞம் செய்யாது உண்பவன் கள்வனுவான். இக்கருத்து ருஷ்ய எழுத்தாளன் லியோ ரோல்ஸ்ரோய் கூறிய Bread-Labour- ''உணவுத்தொண்டு'' என்னும் பொருளை நிகர்த்ததாகும். அஸ்வமேத யாகம் செய்வதால் சமுதாய அரசியற் பிரச்னைகளைத் தீர்க்கலாம் என அவர் வழிகாட்டவில்லை ஒத்துழையாமை என்னும் சத்தியக்கிரகமே பிரச்னைகளைத் தீர்ப்பதற்குச் சிறந்தவழியென்பது அவர் கூற்ருகும். ஒத்துழையாமை நெறியில் வீரமாகச் செயற்பட இயலாத ஒருசில தமிழ்த் தலைவர்கள் பிரச்னையிலிருந்து விலகிஓடி அஸ்வமேதயாகப் போர்வையில் புகுதல் காந்தியத்துக்கு முரணுனதாகும். வாழ்க வாய்மை! வெல்க வீரகாந்தியம்!

## அரபாத் இலங்கை விஜயம்

(கொழும்பு)

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தலைவர் ஜனுப் யாசீர் அரபாத் விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்வார் என்று கொழும்பிலுள்ள பாலஸ்தீன உயர் ஸ்தானிகராலய வட்டாரம் தெரிவித்தது. (ரா)

## யாருடையது?

புலோலி ப. நோ. கூ. சங்கத்திற்கு அருகாமையில் ஒரு பித்தளைத் திறப்பை கிளை முகாமையாளர் திருமதி இராசம்மா கண்டெடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார், உரியவர் அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

## தலவாக்கொல்லை--

( 1-ம் பக்கத்தொடர்ச்சி)

பார்வையிடவுள்ளதாகவும் அதைத்தொடர்ந்து சமாதானக் குழுவொன்று அமைக்கப்படும் என்றும் கூறினுர்.

இன்று தோட்ட நிர்வாகிகள், தொழிற்சங்க உறுப்பினர்கள், தோட்டத் தொழிலாளர்கள் உட்பட பலரையும் சந்தித்துப் பேச இருப்பதாகக் கூறிய திரு. செல்லச்சாமி. அவர்களிடையே சமாதானக் குழுவென்றும் அமைக்கப்படும் என்ருர்.

தோட்டத் தொழிலாளர்கள் மீண்டும் எப்போது வேலைக்குத்திரும்புவார்கள் என்றுகேட்டபோது நாளை வெள்ளிக்கிழமை சகலரும் வேலைக்குத் திரும்புவார்கள் என்று கூறினுர். (ய-பி)

## பொலிசார் மீது துப்பாக்கிச்சூடு ஒருவர் பலி!

(தலவாக்கெல்லை)

மலையகத்திலுள்ள அக்கரப்பத்தனைத் தோட்டமொன்றில் கடமையிலீடுபட்டிருந்த 3 பொலிசார் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் கொல்லப்பட்டார் இருவர் படுகாயமடைந்தனர். (மா

## உள்ளூர் பூசல்களே காரணம்

(கொழும்பு)

''தலவாக்கொல்லைப் பகுதியில் இடம்பெற்ற பிரச்னைகளுக்கு இரு சமுகத்தினருக்குமிடையிலான உள்ளூர் பூசல்களே காரணம்'' என்று ராஜாங்க அமைச்சர் கலாநிதி ஆனந்த திஸ்ஸ டீ அல்விஸ் கூறியுள்ளார். (ரா)

## 'பக்தநந்தனுர்' நாடகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத் தமிழ் மன்றத்தின் ஆதரவில் இன்று 30ம் திகதி மேடையேறவிருந்த நடிகமணி வி. வி. வைரமுத்து குழுவினரின் ''பக்தநந்தனுர்'' நாடகம், எதிர்வரும் பெப்ரவரி 13-ம் திகதி பி. ப. 3மணிக்கு கைலாசபதி கலையரங்கில் மேடையேற்றப்படும். [நா]

## மன்னுர்.-.

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பகுதியிலேயே இருதரப்பினரும் மோதிக்கொண்டனர்.

நேற்றுக்காலை 6-30மணியளவில் பல கவச வாகனங்களில் ஆயுதப்படையினர் போராளிகளைத் தேடிப் புறப்பட்டனர் என்றும் இதில் 8 வாகனங்களில் சென்றவர்கள் மாந்தையில் தற்காலிகமுகாம் அமைத்துக் கொண்டிருந்தார்கள் என்றும் மீதி 5 வாகனங்கள் கண்டல் என்னுமிடத்தை நோக்கிச் சென்றதாகவும் அதேசமயம் கட்டுக்கரையில் ஒரு ஹெலிகொப்டர் படையினரை இறக்கியவண்ணமிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் மீது போராளிகள் துப்பாக்கிகளாலும், ஒருக்கட்லாஞ்சர்களாலும் தாக்கினுர்களாம். சமர் புரிந்த படையினர் ஹெலிகொப்டர் மூலம் அவ்விடத்திலிருந்து சென்று விட்டனர்.

பிற்பகல் 2 மணியளவில் 4 ஹெலிகொப்டரிலிருந்து கட்டுக்கரையில் படையினர் இறக்கப்பட்டனர். போராளிகளுக்கும் படையினருக்குமிடையே மீண்டும் கடுஞ்சமர் இடம்பெற்றது. அச்சமயம் விமானத்திலிருந்து சரமாரியாகக் குண்டுகள் வீசப்பட்டன. தரையிலிருந்தும் பீரங்கிகளிலிருந்தும் மோட்டாகளிலிருந்தும் குண்டுகளும், ஷெல்களும் ஏவிவிடப்பட்டன. இத்தாக்குதல்களினுல் பெரும் உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. பல வீடுகளும் சேதமடைந்தன. (மா)

# வைத்தீஸ்வரா இருக்கும்வரை

## அம்பிகைபாகன் நினைவிருக்கும்

### கல்லூரி அஞ்சலி நிகழ்ச்சியில் உரை

[எம். ரி. சந்திரகுமார்]

''வைத்தீஸ்வர வித்தியாலயத்தின் பொற்காலம் உயர்திரு அம்பிகைபாகன் அதிபராக இருந்த காலமே என்ருல் அது மிகையாகாது தமிழ் கூறும் நல்லுலகம் உள்ளவரை வைத்தீஸ்வராக் கல்லூரி இருக்கும்வரை, அதில் பைந்தமிழ் மாணவச் செல்வங்கள் பயிலும்வரை அமரர் அம்பிகைபாகன் நாமம் நின்றுலவும்.''

இவ்வாறு வண்ணைவைத்தீஸ்வராக் கல்லூரியில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற அமரர் அம்பிகைபாகனின் அஞ்சலிக் கூட்டத்திற்கு தலைமை வகித்து பேசிய கல்லூரி உப-அதிபர் திரு எஸ். இராசதுரை குறிப்பிட்டார்.

கல்லூரியின் ஆசிரியர்களும், மாணவர்களும், பழைய மாணவர்களும் பெருந்திரளாகக் கலந்துகொண்ட இக் கூட்டத்தில் கல்லூரியின் பழைய மாணவரும் ஓய்வுபெற்ற ஆசிரியருமாகிய சட்டத்தரணி திரு. டபிள்யு. எஸ். செந்தில் நாதன் இரங்கலுரை நிகழ்த்துகையில் ஒருமனிதனது வாழ்க்கையில், 33 ஆண்டுகாலம் என்பது ஒரு சிறிய பகுதியல்ல. அத்தகைய 33 கால வாழ்வினை வைத்தீஸ்வராக் கல்லூரியின் அதிபர் என்றபாரிய பொறுப்பினை ஏற்று 3-ம் தரத்திலிருந்த பாடசாலையை முதல்தரப் பாடசாலையாக தரம் உயர்த்த அவர் ஆற்றிய பணிகள் அளப்பரியவை என்று குறிப்பிட்டதுடன் அவருடைய நிர்வாகத்தில் ஓர் ஆசிரியனுக கடமையாற்ற தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை பெரும் பாக்கியமாக கருதுவதாக தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் திரு. எஸ். சிவசரவணபவன் இரங்கலுரை நிகழ்த்துகையில்: அமரர் அம்பிகைபாகன் என்ன செய்தார்? என்று யாரும் ஒரு வினவை எழுப்பினுல் அதற்கு விடையாக அவர்என்ன செய்யவில்லை என்ற வினுவே பதிலாக அமையும். அந்தளவுக்கு கல்லூரியின் கல்வி வளர்ச்சியிலும்சரி, கட்டடவசதிகளிலும்சரி, கலாசார விருத்தியிலும் சரி வண்ணை வைத்தீஸ்வராவை உயர்நிலை கொள்ளச் செய்தார். இலங்கையில் மட்டுமன்றி கடல்கடந்த நாடுகளிலும் வைத்தீஸ்வராவின் புகழ் பரப்ப வழிசமைத்தார் என்ருர்.

உடல் தளர்ந்த நிலையிலும், நோய்வாய்ப்பட்ட நிலையிலும் கடந்தவருடம் பாடசாலைக்கு விஜயம் செய்து அதிபராகிய எனக்கும், ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும், ஆலோசனைகளும் அறிவுரைகளும் கூறிச்சென்றதை இச் சந்தர்ப்பத்தில் நன்றியுடன் நினைவு கூறுவதாக குறிப்பிட்ட அதிபர் அம்பிகைபாகனின் இழப்பு பேரிழப்பாகுமெனவும் அதே வேளை அவரின் ஆத்மா சாந்தியடைய அனைவரும் பிரார்த்திப்போம் என்ருர்.

ஆசிரியர் ஜனுப் எம். எஸ். ஏ. ரஹீம் உரையாற்றுகையில் வைத்தீஸவராக் கல்லூரி ஒரு இந்து ஸ்தாபனமாக இருந்தபோதிலும் இஸ்லாமிய, கிறிஸ்தவ மாவணவர்கள் தத்தம் மதவழிபாட்டினை சுதந்திரத்துடன் மேற்கொள்ள வழிவகுத்த அமரர் அம்பிகைபாகன் இந்தியாவுக்கும், இலங்கைக்கும் ஓர் இலக்கியப்பாலமாக திகழ்ந்தார் என்று புகழாரம் சூட்டி அவர், இத்தகைய பெரியாரின் ஆன்மா சாந்தியடைய நாம் வைத்தீஸ்வராக் கல்லூரியை சிறந்த பாடசாலையாக ஒழுக்க சீலமுடைய மாணவர்களையுடைய பாடசாலையாக கட்டி எழுப்புவதே எமதுபணி என்ருர்.

ஆசிரியைகள் திருமதி ரி. இராமநாதன், திருமதி ஆர். பொன்னுச்சாமி உட்பட பலர் இரங்கலுரை நிகழ்த்தினர். அமரர் அம்பிகைபாகனின் மரணச்சடங்கு நடைபெறவிருக்கும் தினம் வியாழக்கிழமை அமரருக்கு மரியாதை செலுத்தும்வகையில் பாடசாலை விடுமுறை தினமாகுமென உப-அதிபர் தெரிவித்தார். [ச]

# கல்வி உலகின் பேரிழப்பு!

[யாழ்ப்பாணம்]

அறிஞர் அம்பிகைபாகனின் மறைவ கல்விஉலகின் பேரிழப்பு என்று வடமாகாண ஆசிரியர் சகாயநிதிச் சங்கத்தின் பொருளாளர் திரு சே சிவராஜ வெளியிட்ட இரங்கற் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

''கல்விமான் ச. அம்பிகைபாகனின் மறைவு கல்வி உலகிற்கும். ஆசிரியர் உலகிற்கும் பேரிழப்பாகும் என்ருல் மிகையாகாது. கல்விசார்ந்த ஸ்தாபனங்களிலும், ஆசிரியர் உலகிலும் பெரும்பங்கு வகித்து அவர் உழைத்ததை நாடறியும் அரை நூற்ருண்டைத் தாண்டிய எமது சங்கத்திலும் சுமார் பதினெட்டு ஆண்டுகள் தொடர்ந்து தலைமைப் பதவி வகித்ததோடு அதன் வளர்ச்சிக்கும் அயராது பாடுபட்டார்.''

இவைப்பாறிய பின்னரும் எமது சங்க வளர்ச்சியில் பெரும் அக்கறை கொண்டிருந்த இப்பெரியாரின் மறைவு எமது சங்கத்திற்கு மட்டுமல்லாது, கல்வி உலகிற்கும் பேரிழப்பாகும் என்று தமதுசெய்தியில் அவர் குறிப்பிட்டுள்ளார்

## "முஸ்லிம் மாணவரின் கல்விக்கு வழிசெய்தவர்"

[யாழ்ப்பாணம்]

''சாதி, மதம், பேதம் என்ற கொடிய வேறுபாடுகள் எதுவுமின்றி எல்லோரும் ஒரு குலம் என்ற எண்ணத்துடன் கல்வித்துறையில், ஆத்மீகத் துறையில் முன்னின்று உழைத்தவர் மறைந்த ச. அம்பிகைபாகன். முஸ்லிம் மாணவர்களுக்கென்று தனியான உயர் கல்விநிலையங்கள் இல்லாத காலகட்டத்தில், வண்ணை வைத்தீஸ்வராவில் கல்விகற்ற முஸ்லிம் மாணவர்கள் ஆத்மீகத்துறையில் சீர்பெற்று விளங்க ஒரு முஸ்லிம்மார்க்க குருவை நியமனம் செய்த பெருமை அன்னவரைச் சாரும். இராமகிருஷ்ணதுஷன் வைத்தீஸ்வர வித்தியாலயம் சம்பூரணமான ஒரு இந்து பாடசாலையாக சகல விசயங்களிலும் முக்கியத்துவம் கொடுத்து செயல்பட்ட காலகட்டத்தில் இஸ்லாமிய வாழ்க்கை முறையில் உயர் நிலையடைய நற்சிந்தனையுடன் ச. அம்பிகைபாகன் அவர்கள் செயல்பட்டதை யாரும் மறைக்க முடியாது.''

இவ்வாறு யாழ். மானிப்பாய் வீதி பெரிய முகைதீன் ஜும்மா பள்ளிவாசல் பரிபாலனசபைத் தலைவரும் யாழ். வைத்தீஸ்வரா பழைய மாணவருமான ஜனுப் எம். எஸ். லாபிர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்

'முஸ்லிம் மாணவர்களை அழைத்து இன்சொற்களால் புத்திமதிகள் கூறியும், முஸ்லிம் மாணவர்களின் பெற்ருேரை அழைத்து அவர்கள் குறைபாடுகளை எடுத்துச் சொல்லியும் அரசாங்க உயர் பீடங்களில் முஸ்லிம் மாணவர்களை உயர் அதிகாரிகளாக்கிய பெருமை அவருக்குரியது. கல்லூரியிலிருந்து அவர் ஓய்வு பெற்றபோது கல்லூரிக்கு ஒரு பெரும் இழப்பு என்ற நிலை உண்டானது. அவர் மறைவு தமிழ் பேசும். இனத்துக்கு ஒரு பேரிழப்பாகும்'' என்றும் அவர் தெரிவித்ள்ளார்.

# சர்வோதய தோற்றம்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பவராய் வாழ்ந்ததும் ஓர்க. உழைப்பின் திறத்தில் உடல் உழைப்புடையவன் தொழிலாளி. உடல் உழைப்பற்றவன் முதலாளி. இவனே உழைப்புத் திறனில் முற்பட வேண்டும். இவன் தன் முதலீட்டகத்தில் தன் தொழிலாளிகளுடன் தன் முதலின் உரிமைப்பாட்டை மறந்து தன் தொழிலின் கடமைப்பாட்டில் கருத்துள்ளவனுக் கருமம் ஆற்றும் போது கரும யோகியாய் அத்தனைத் தொழிலாளிகளுக்கும் அன்புடைய இன்ப வழிகாட்டியாய் விழுப்பம் உறுவான். உழையாதோர் உலகம் இம் முறை நெறியால் உடைந்து தவிடு பொடியாகிவிடும். விடவே உழைப்போர் உலகமே உரன் பெற்று ஒருலகம் ஒளிவிட்டு ஒளிரும் இவ் ஒளிர்வே எல்லோரதும் மேம்பாடு என்ற சர்வோதயம் பொருளாய் இயக்கமுறும் இந்த இயக்கம் ''அன்பின் வழியது உயர் நிலை'' என்ற திருவள்ளுவர் நாயனர் திருவாக்கை மெய்ப்படுத்தும் முதலாளி தொழிலாளியைத் தொழிற்படுகையில் தொழிலாளியின் பன்முக இன்ப துன்பம் எல்லாம் அநுபவ முறையாகத் தெளிந்து உயிர்நிலை அன்பின் வழியது என்ற உண்மையில் உறுதி பிறக்கும்.

முதல் உள்ளவன் தம் முதலை தன் முதலாக எண்ணி உண்பதற்கும் உடுப்பதற்கும் ஏன் நான் உழைத்தல் வேண்டும்? உழைப்பு எனக்குத் தேவையன தொன்றன்று என்று மடியுறுவானுனல் உலகின் ஒரு பக்கம் செயறற்றுப் போகும். செயலற்ற பககம் ''மறம்'' ஆகவும், செயலுறு பக்கம் ''அறம்''ஆகவும் மலர்வுறும். இந்த மாறுநிலை காலப் போக்கில் முரண் நிலையாய் உலகப் பண்பாம் அன்பினை உறைய வைத்திடும். அன்பு உலகில் உறைந்தால் உலகப் பயனும் அறம் ஆங்கே உறங்கிவிடும். உலகம் உறைந்து உறங்கினுல் உயிருக்குரிய உயிர்ப்பு ஏது? இந்த உயிர்ப்பு உயிர் உண்மை நோக்கி உலவ வைக்க வேண்டின் உழைக்காதோராம் முதலாளிகள் உலக உண்மையை உணர்த்தும்.

உலக ஞானமாம் விஞ்ஞானத்தல் வாழ்க்கைச் சாதனங்கள் புறவளவில் பெருகிய போதிலும் அவை அகவளவுக்குத் துணையுருது புறத்தளவைப் பெரிதாக்கிவிட்டது. பெரிதான புறத்தளவை மட்டுப்படுத்தி அகத்தளவில்அணுக்கமுறச் செய்ய வேண்டுமாஞல உலக விஞ்ஞானத்தை ஆன்ம ஞானம் எல்லைப்படுத்த வேண்டும். எல்லைப்படுத்தலாவது, விஞ்ஞானப் பெறுபேறு-பயன்பாடு எல்லாம் ஆன்மஞான வல்லமைக்கு உட்பட்டதாக நிறுவுதலாம் இவ் நிறுவுதல் நிலைக்காவிடின் உலகின் உருவை அவ்விஞ்ஞானம் விளக்கமடையச் செய்யாது சிதைத்துவிடுமென்பதில் ஐயமின்று ஆன்ம ஞான எல்லைக்குள் ஆக்கமாகும் விஞ்ஞானமே இனி உலகில் இரிதாகும் என்பதில் உறுதி கொள்பவரே சர்வோதயத்தில் அறிவுடைமையராய் அமைவர். அதாவது உலகம் ஒரு பொருள் மட்டுமல்ல;அவ் உலகில் உளிப்பட்ட ஒவ்வொரு உயிரும் பொருளே என்பதிலும்துணிந்தைசிந்தயராதல் வேண்டும். உயிரும் ஒரு பொருள் என்ற கருத்து வன்மையிற்ருன் சர்வோதயம் கால் கொண்டு சிறக்கும். உலகம் போல் உயிரும் உலகினும் சிறந்த பொருள். இப் பொருளைக் கண்ணுற் கொள்ளும் போது கிம்சைக்கு- துன்புறுத்துதலுக் கிடமில்லை; அருளுடைமையே இடமாகும். இவ்விடத்திலே அனைவரதும் பேம்பாடாம் சர்வோதயம் தோற்றமாகும்.

சர்வோதயவாளர் இம்சையில் நம்பிக்கை வைக்காது அகிம்சையிலே நம்பிக்கை வைத்தல்வேண்டும். கட்சி அரசியலைக் காமுறுதல்கூடாது. நிலத்தின் தனியுடமையை நினைத்தல்கூடாது. நிலமும் பொருளும் எல்லோர்க்கும் உரியது எல்லோரும் ஒருங்கிணைந்து நிலப்பொருள் விருத்திக்கு உழைக்கவேண்டும். அவ் உழைப்பின் பயனை எல்லோரும் பொருந்தி அனுபவிக்க வேண்டும். ஒவ்வொருவரும் தம்தம் தனிக்கருத்தையும் கருமத்தையும் தன்னிச்சையில் தலைதூக்கவிடாது அடக்கமுடமையாய் ஆளுதல்வேண்டும். கட்சி வேற்றுமைகளையும் சாதிப்பாகுபாடுகளையும் மதமாறுபாடுகளையும் கருத்திற் கொள்ளாது பொதுவினையில் ஒன்றுகூட்ட முயலவோர் தபமை மனிதர் என்றும், தம் மதம் மானிடம் என்றும்; தம்சாதி மானிட -மானிடசாதி என்றும் கருதிக்கொள்ள வேண்டும். அனைவரின் வளர்ச்சிப்பாட்டுக்கு மறுத்து ஒரு சிலரின் ஒரு வகுப்பின் வளர்ச்சிக்குக் கண்ணுகும் போது அதனை மடிவுற மனம சிலாது பணி புரிதல் வேண்டும் ஒளி - இருளை அகற்றவில்லை என்ருல் அவ்வொளிதன் ஒண்மையைத் தானே அணைத்து விட்டது என்றே எண்ண வேண்டும் என்பதாம்.

## சர்வதேச சமாதானஆண்டு

[சுண்டுக்குளி]

''சர்வதேச ரீதியில் இன்று 158 நாடுகளில் 37,275லயன்ஸ் கழகங்கள் சேவைக் கழகங்களாக முன்நிற்பதை நாம் அறிவோம் இவ்வருட லயன்ஸ் கழக மகுட வாக்கியமாக ''நாம்ஒருமித்த சிறந்தசேவை செய்வோம்'' என்பதற்கிணங்க அகில உலகிலும் மிகப் பெரிய சேவைக்கழகமாக இதன்ஸ்தாபகர் திரு மெஸ்வின் ஜோன்ஸ் அவர்கள் 1917ம் ஆண்டுயூன் மாதம் 7ம் திகதி ஸ்தாபித்து இச் சேவையை மனித சமுதாயத்திற்கு அளித்துள்ளார். இவ் வருடம் சர்வதேச சமாதான வருடமாக இருப்பதால் நாமும் சமாதானத்துடன் பல காரியங்களை செய்யமுயற்சிப்போம்.''

இவ்வாறு வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் தலைவர் 'லயன்' டபிள்யூ என் தேவகடாட்சம் வட்டு இந்துக் கல்லூரி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற வட்டு லயன்ஸ் கழக அபிவிருத்தி செயற்பாடுகள் குறித்து நடைபெற்ற வைபவம் ஒன்றிற்கு தலைமைவகித்து பேசுகையில் கூறினர்.

இவ்வைபவத்தில் கழக அபிவிருத்தி நிதிக்காக மாணவ சமூகத்தினரின் ''நாடிருக்கும் நிலைகளில்'; என்னும் கவிதா நிகழ்வொன்றும் ''நாடும் வீடும்'' என்ற சமூக நாடகமும் தனி நடிப்பு, வீணைக் கச்சேரி போன்ற இசை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## ஐ. வி சங்க ஊழியர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். ஐக்கியவியாபாரச் சங்கத்தின் அவல நிலை குறித்து சங்க ஊழியர்கள் கவலை தெரிவித்து துண்டுப் பிரசுரம் ஒன்றினை வெளியிட்டுள்ளனர்.

அப்பிரசுரத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

''சென்ற ஆண்டு முற்பகுதியில் பல கொள்ளைகள் காரணமாக அன்று இருந்த நிர்வாகத்தினர் மேலும் நடத்த முடியாமையினுல் ஊழியர்களை விலகும் படியும், ஸ்தாபனத்தை மூடிவிடவும் தீர்மானித்தார்கள் இந்த நிலையில் பல ஊழியர்கள் நலன் விரும்பிகள் பல இடம் சென்று ஆதரவாளர்கள், அனுதாபிகளிடம்இருந்து பல லட்ச ரூபாயைப்பெற்று புதிய நிர்வாகத்திடம் ஒப்படைத்தார்கள். இதுவும் போதாமையால் 4 வாகனங்களையும் விற்றும் வியாபார வழி முறை தெரியாமல் தவிக்கிருர்கள்

இன்று நிதி நிலைமை சீர்கெட்டு மேலும் பல ஊழியர்களை வேலை நீக்கம் செய்தும் செய்யவும் உள்ளார்கள் ஆதலால் அனுதாபிகள், பங்காளிகள், வைப்புப் பணம் வைத்தவர்கள் உடன் தலையிட்டு இந்த ஸ்தாபனத்தையும்,எஞ்சி உள்ள ஊழியர்களையும காப்பாற்றும் வண்ணம் மிகவும் தாழ்மையாக வேண்டுகின்ருேம்.'' (மா)

## இன்றையபலன்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

மகரம்: நல்ல காரியங்களை ஆரம்பிப்பதற்கு இன்று பொன்னுன நாள். மக்களால் மகிழ்ச்சியும் குடும்பத்தில் சுமுகமான நிலையும் உண்டு.

கும்பம்: அரசின் ஆத்திரப் பார்வை உங்கள் பக்கம் திரும்பும். முன்னேற்றத்தைத்தடுப்பதற்கு எதிரிகள் முனைவர். அமைதியே நன்று.

மீனம்; களஸ்திர வழியால் நன்மைகள் கிடைக்கும். குடும்பத்திலும் மகிழ்ச்சிக்கு இடமுண்டு. நண்பனின் திடீர் வரவுக்கும் இடமுண்டு.

திருமலை
வே. ரவீந்திரன்

## கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

வடமராட்சி கால்நடை வளர்ப்போர் சங்கத்தினரின் 'நோய்களும் அவற்றைத் தடுக்கும் வழிவகைகளும்'' என்னும் கருத்தரங்கு கடந்த சனிக்கிழமை புலோலி சுமநல சேவை'நிலையத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மந்திகை ஆதார வைத்தியசாலை வைத்திய நிபுணர் டாக்டர் ஆனந்தராஜ 'மனிதனுக்கு வரும் நீரிழிவு' என்னும் தலைப்பிலும் புத்தூர் அரச மிருகவைத்தியர் டாக்டர் திருமதி எஸ். சுப்பிரமணியம் பசுக்களுக்கும் எருதுகளுக்கும் ஏற்படும் நோய்கள்பற்றியும் அச்சுவேலி அரச மிருக வைத்தியர் டாக்டர் திருமதி ரி. தங்கராசா கோழிகளுக்கு வரும் நோய்கள்பற்றியும் கருத்துரைகள் வழங்கினர். [ச]

# யாழ். வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய

# பழைய மாணவர் மன்றம்

முன்னைநாள் அதிபர் அமரத்துவமடைந்த

## உயர்திரு. ச. அம்பிகைபாகன், B. A.

அவர்களின் ஆத்மசாந்திக்காக

# எமது இதய அஞ்சலி

தோற்றம் 2—5—1908



மறைவு 26—1—1986

அம்பிகையின் அழியா சக்தியையும் பாகனது ஞான ஒளியையும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற அதிபர் உயர்திரு. ச. அம்பிகைபாகன் அமரராகி விட்டாலும் அவரின் ஞானஒளி பழைய மாணவர்களாகிய எமக்கு என்றும் வழிகாட்டியாக அமைவதாக.

பழைய மாணவர் மன்றம், யாழ்/வைத்தீஸ்வர வித்தியாலயம்.

ஏ 157

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# இந்த நகைகளுக்கு திங்கள் முதல் நஷ்டஈடு

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கி சங்கானைக் கிளையில் களவுபோன நகைகளுக்கான நட்டஈடு பெப்ரவரி 3-ம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் மக்கள் வங்கியின் சுன்னாகம் கிளையில் வழங்கப்படவிருக்கின்றது.

இதுதொடர்பாக மக்கள் வங்கி பிரதேச முகாமையாளர் விடுத்துள்ள அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

எமது சங்கானைக் கிளையில் அடைவுவைக்கப்பட்டு, பின்னர் களவாடப்பட்ட நகைகளுக்கான நட்டஈடு எதிர்வரும் 3-ம் திகதி திங்கட்கிழமைதொடக்கம் வழங்கப்படவிருக்கிறது. இந்நட்டஈடு சங்கானைப்பகுதி மக்களின் வசதிகருதி எமது சுன்னாகம் கிளையிலிருந்து வழங்கப்படும்.



யாழ். நகரில் நேற்றுக் காலை நடைபெற்ற மாபெரும் ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்களின் ஒரு பகுதியினரை இங்கு காணலாம். (படங்கள் : 'தேவா')

## மரண அறிவித்தல்

### சதிரவேலு பேரம்பலம்

வேலணை தெற்கைச் சேர்ந்த இளைப்பாறிய தலைமை ஆசிரியரும், வைத்தியருமானதிரு. க. பேரம்பலம் காலமானார் அன்னார் திருமதி பேரம்பலம் அன்னம்மாவின் அன்புக்கணவரும், ஸ்ரீகந்தராசா [பிரான்ஸ்], ஸ்ரீகந்தராணி, ஸ்ரீகந்தபாலன் ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ் சென்ற மனோன்மணி, செல்வதி, சதமணி, ஆகியோரின் அன்புச் சகோதரரும். திருமதி றூபி ஸ்ரீகந்தராசாவின் மாமனாரும், கருணைநந், தேவானந், தயானந், யெயானந் ஆகியோரின் பேரனும், காலஞ் சென்ற கணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற செல்லையா, ஆயுள்வேத டாக்டர் கந்தையா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று வியாழக்கிழமை மாலை மூன்று மணிக்கு தகனக்கிரியைக்காக வேலணைத்துறை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். [C 448]

### திருமதி தம்பிமுத்து அன்னப்பிள்ளை

நுணுவில் சந்தி திருமதி தம்பிமுத்து அன்னப்பிள்ளை 29-01-86ல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற திரு. தம்பிமுத்து அவர்களின் அன்பு மனைவியும், பூபாலசிங்கம் (இளைப்பாறிய செயலாளர், அரசின வைத்தியசாலை), வன்னியசிங்கம் (வர்த்தகர்), வைத்திய கலாநிதி பரராஜசிங்கம், கொச்சிக்கடை, திருமதி இராசமணி சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புத் தாயாரும், கௌதவமணி (கந்தரோடை), தனலட்சுமி (நுணுவில்சந்தி), சரோஜினிதேவி (ஆசிரியை, மட்டுவில் மகாவித்தியாலயம்), சுப்பிரமணியம் இளைப்பாறிய சிறை ஓவசியர்) ஆகியோரின் அன்பு மாமியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 30-01-86 வியாழக்கிழமை மாலை 3 மணியளவில் நுணுவில் சந்தியிலுள்ள இல்லத்தில் நடைபெறும். (C 440)

### சங்கரப்பிள்ளை அம்பிகைபாகன்



ச. அம்பிகைபாகன் (இளைப்பாறிய அதிபர்) அவர்கள் காலமகிவிட்டார். இவர்காலஞ்சென்ற சுன்னாகம் கப் ல்லவளவு சங்கரப்பிள்ளை, சிவகாமசுந்தரி தம்பதிகளின் அன்புப் புதல்வரும், நகுலாம்பிகையின் அன்புக் கணவரும், ஆனந்தகுமாரசாமி (குடும்பத் திட்டச் சங்கம்) பூங்கோதை (சாம்பியா), கலாநிதி பாலசுப்பிரமணியம் (U S A.), கலாநிதி செந்தில்செல்வன் (குவைத்), ஆனந்தகௌரி (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சர்வேந்திரம் (சாம்பியா), சரோஜாதேவி, காயித்திரி (U S A., நவானந்தன் (சிங்கப்பூர்), லோகேஸ்வரி (குவைத்) ஆகியோரின் அன்பு மாமனும், அபிராமி, ஆரணி, சரவணா, சங்கரா, வித்தியா, நகுலன், குருபரன், பிரணவன், நித்தியா ஆகியோரின் அன்புப்பேரனும், சுந்தரா பிள்ளையின் அன்புச்சகோதரரும், மனோன்மணி, மகேஸ்வரியின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக, வியாழக்கிழமை (30-1-86) மாலை 3 மணியளவில், ''மணிமனை'' மல்லாகத்தில் இருந்து இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். A 151

## இன்று செயலகம் செயல்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகம், மற்றும், அரச, திணைக்களங்கள் முன்னிலையில் நடைபெற்ற மறியல் போராட்டம் நேற்றுடன் கைவிடப்பட்டதால் இன்று தொடக்கம் அவை செயல்படவுள்ளன.

கடந்த 5 நாட்களாக மறியல் போராட்டம் நடைபெற்றது தெரிந்ததே. (மா)

## எம். பி. தெரிவு செல்லுபடியாகாது

[கொழும்பு]

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அக்மீமன தொகுதி பாராளுமன்ற உறுப்பினரான திரு றிச்சாட் பத்திரன, அக்மீனத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டது செல்லுபடியாகாது என்று உயர்நீதிமன்றம் நேற்றுதீர்ப்பு வழங்கியது

தேர்தல் நடைபெற்றகாலப் பகுதியில் இவர் ஒரு அரசாங்க உத்தியோகத்தராக இருந்தார் என்ற காரணத்தினால் இவரது தெரிவு செல்லுபடியற்றது எனத்தீர்ப்பில் கூறப்பட்டது. [பி]

## நால்வர் காயம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் நேற்று ஆயுதப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபொழுது நால்வர் படுகாயமுற்று யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

றெபேர்ட் (20 வயது), யோகசுந்தரம் (47 வயது), செபஸ்தியாம்பிள்ளை (20 வயது), சந்தியாக்குட்டி (53 வயது). இவர் மன்னாரைச் சேர்ந்தவர். இந்த நால்வருமே காயமடைந்தவர்களாவர்.

காயமடைந்தவர்களில் இருவர் அரச ஊழியர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (மா)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389, 24126.

## "ஆசிரியர் உலகின் போராட்ட உணர்வு தொடரவேண்டும்"

(யாழ்ப்பாணம்)

''இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் அழைப்பினை ஏற்று தமிழர் ஆசிரியர் உலகம் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் மீண்டும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டமைக்கு சங்கம் தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றது.'' என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் த. மகாசிவம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயம் உட்பட இன்றைய சகலநெருக்கடிகளுக்கும் தமிழ் பேசும் மக்களின் எதிர்ப்பை முழுமையாக வெளிப்படுத்தும் நோக்குடன் தொழிலாளர் நடத்திய பேரணியில கலந்துகொண்ட அனைவருக்கும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தனது நன்றியைத் தெரிவிக்கின்றது.

## மரண அறிவித்தல்

### யோகேஸ்வரி தியாகராஜா

கந்தர்மடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற தியாகராஜாவின் (முன்னாள் உணவுத்திணைக்களம்) மனைவி யோகேஸ்வரி காலமானார். அன்னார் திரு. சபாநாதன் (முன்னாள் அட்டன் நஷனல் வங்கி), சௌந்தரலட்சுமி வடிவேலு, சட்டத்தரணி சிவகுருநாதன் (பிரதம ஆசிரியர் தினகரன்), பொறியியலாளர் கமலநாதன் (நியூஸிலாந்து), டாக்டர் பாஸ்கரநாதன் (நியூஸிலாந்து) ஆகியோரின் அருமைச்சகோதரியும். திரு வடிவேலு (முன்னாள் புகையிரத இலாகா), திருமதிகள் மனோன்மணி, தனரஞ்சிதமணி, சரோஜினி மீனா ஆகியோரின் அன்புமைத்துனியுமாவார். இறுதிச சடங்குகள் இன்று வியாழக்கிழமை இல 101, அரசடிவீதி, கந்தர் மடத்திலுள்ள இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு 3-30 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

A-164 தகவல்: இ. சிவகுருநாதன்

### கணபதிப்பிள்ளை இராசதுரை



பிள்ளையார் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் கணபதிப் பிள்ளை இராசதுரை அவர்கள் 27-1-1986ல் காலமாகிவிட்டார். அன்னார்சிவயோகத்தின் அன்புக்கணவரும், இரஞ்சிதமலர் (U. K) யோகேஸ்வரி, இரத்தினேஸ்வரன், செந்தமிழ்ச்செல்வி, சாந்தநாயகி, வதனி ஆகியோரின் அன்புத்தந்தையும் நாகராஜா (U. K), சிவதாசன் ஆகியோரின் அன்புமாமனாரும், ஜனனி ஆரணியின் பேரனும், சிவலிங்கம் (உரிமையாளர், சிவலிங்கம் மோட்டேர்ஸ்), குணரத்தினம் (பிள்ளையார் மெற்றல்வேக்ஸ்), அபிமன்யு(சிவா ஸ்ரோர்ஸ்), சகாதேவன் (பிள்ளையார் ரேடிங் கொம்பனி), தையல்நாயகி, சகுந்தலை ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றபாலசுப்பிரமணியத்தினதும், பரஞ்சோதிநாதன் (உரிமையாளர், ஜோதிவிலாஸ் மன்னார்), பாலகிருஷ்ணன் (உரிமையாளர். பாலகிருஷ்ணா ஸ்ரோர்ஸ்), பாலச்சந்திரன் (கல்வி இலாகா) ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 30-01-86 இன்று வியாழக்கிழமை 3-00 மணியளவில் இல. 31, மானிப்பாய் வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று வில்லூண்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். A-162